**மாதிரி வினாத்தாள்**

நிறுமக் கணக்குகள் - பகுதி IV

12th Standard

**கணக்குப்பதிவியல்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.
III.வினா எண் 15- ற்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

Time : 02:00:00 Hrs Total Marks : 100

## பகுதி - அ

5 x 1 = 5

1) பங்கு விண்ணப்பத் தொகை பங்கின் முகபதிப்பில்........இருத்தல் வேண்டும்

(a) 8% (b) 6% (c) 5%

2) ஒரு நிருமம் பங்குகளை ஒருபிழைப்பு செய்யப்படுமெனில் அவை ......... ஏட்டில் கட்டாயமாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

(a) நிறும சட்டம் (b) சங்க நடைமுறை விதியில்

(c) பதிவு சான்றிதழ்

3) ஒரு நிறுமம் ஒறுபிழப்பு செய்ய வேண்டுமானால் குறைந்த பட்சம் பங்குதாரருக்கு............நாட்களுக்குள் தகவல் அளிக்க வேண்டும்.

(a) 20 (b) 15 (c) 14

4) பங்கு ஒறுபிழப்பு மூலம் ஈட்டிய இலாபத்தை........கணக்கிற்கு மாற்றப் படவேண்டும்.

(a) பொது காப்பு

(b) முதலின காப்பு (c) பற்பல காப்பு

5) JK லிமிடெட் பங்கொன்று ரூ.10 மதிப்புடைய 75,000 பங்குகள் வெளியிடப்பட்டது.மக்களால் ரூ.7 வீதம் முழுவதும் ஒப்பப்பட்டது எனில் அழைக்கப்படாத முதல்.........

(a) 2,25,000 (b) 5,25,000 (c) 7,50,000

## பகுதி - ஆ

5 x 5 = 25

6) காப்பு முதல் என்றால் என்ன?

7) அழைப்பு நிலுவை என்றால் என்ன?

8) பங்கு ஒறுப்பிழப்பு என்றால் என்ன?

9) அழைப்பு முன் பணத்துக்குரிய குறிப்பேட்டுப் பதிவு தருக.

10) அனிதா வரையறு நிறுமம் பங்கு ஒன்று ரூ.10 வீதம் 50,000 முன்னுரிமைப் பங்குகளை ரூ.3 முனைமதில் வெளியிட்டது.உரிய குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

## பகுதி - இ

4 x 12 = 48

11) சுரேஷ் வரையறு நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட முதல் ரூ.20,00,000. பங்கு ஒன்றுக்கு ரூ.10 வீதம் 2,00,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டு கூட்டுருவாக்கப்பட்டது.அதில் 1,90,000 பங்குகளை நிறுமம் பொது மக்களுக்கு வெளியிட்டது. ஆனால்,பொது மக்கள் அவற்றில் 1,80,000 பங்குகளை ஒப்பினர்.பங்கு ஒன்றுக்கு ரூ.6 வீதம் இயக்குநர்கள் செலுத்தக் கோரினர்.அவற்றில் 1000 பங்குகளுக்கான அழைப்புப் பணம் ரூ.2 தவிர அனைத்துப் பணமும் பெறப்பட்டது.பல்வகையான பங்கு முதலைக் கணக்கிடவும்.

12) பிரீத்தி லிமிடெட் ரூ.100 வீதம் 25,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்றது.கீழ்கண்டவாறு தொகை செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பத்தின் போது ரூ.30
ஒதுக்கீட்டின் போது ரூ.40
முதல் மற்றும் இறுதி அழைப்பு ரூ.30

பொதுமக்களிடமிருந்து 30,000 பங்குகள் பெறப்பட்டன.அதிகமாக பெட்ரா பங்குகள் மீதான விண்ணப்பங்கள் இயக்குநர்களால் நிராகரிக்கப்பட்டன.அனைத்துத் தொகையும் முறையாகப் பெறப்பட்டது.பேரேட்டுக் கணக்குகளை தயாரிக்க.

13) அருண் லிமிடெட் ரூ.10 வீதம் 20,000 பங்குகளை 10% தள்ளுபடியில் வெளியிட்டது.

விண்ணப்பத்தின் போது ரூ.2.50
ஒதுக்கீட்டின் போது ரூ.3.00
முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.3.50

200 பங்குகள் மீதான இறுதி அழைப்பு தவிர ஏனைய தொகைகள் அனைத்தும் பெறப்பட்டன.இப்பங்குகளை உரிய அறிவிப்பு கொடுத்து நிறுமம் ஒறுப்பிழப்பு செய்தது. ஒறுப்பிழப்புக்கான.பதிவினைச் செய்க.

14) திவ்யா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட் ஒன்று ரூ.10 முகமதிப்புடைய 500 சாதாரணப் பங்குகளின் முதல் அழைப்புப் பணம் ரூ.2 வீதம் மற்றும் இறுதி அழைப்பு ரூ.3 வீதம் செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தனர்.இதில் 300 பங்குகளை பங்கொன்று ரூ.6 வீதம் முழுவதும் செலுத்தப் பட்டவைகளாக காவ்யாவிற்கு மறு வெளியீடு செய்தனர். தேவையானக் குறிப்பேட்டுப் பதிவுகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளையும் தயாரிக்க.

## பகுதி - ஈ

1 x 20 = 20

15) a) நாராயணன் நிறுமம் ரூ. 4,00,000 அங்கிகரிக்கப்பட்ட பங்கு முதலை கொண்டுள்ளது . இது பங்கு ஒன்று ரூ. 20 வீதம் 20,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டு அனைத்து பங்குகளும் ரூ . 2 முனைமத்தில் வெளியிடப்பட்டன . இத்தொகை பின்வருமாறு செலுத்தப்பட வேண்டும் .

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ. 10 |
| ஒதுக்கீட்டின் போது (முனைமம் உட்பட) | ரூ. 7 |
| முதலாவது அழைப்பின் போது மற்றும் இறுதி அழைப்பின் போது | ரூ. 5 |

அனைத்து பங்குகளும் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டன . சங்கர் வைத்திருந்த 2,000 பங்குகள் தவிர ஏனைய தொகை அனைத்தும் பெறப்பட்டது . இவரின் பங்குகள் மீது அழைப்புத் தொகை பெறத் தவறவே ஒருப்பிலப்பு செய்யப்பட்டன. பின்னர் இவை பங்கொன்று ரூ. 14 க்கு மறு வெளியீடு செய்யப்பட்டன . குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

**(OR)**

b) ஒரு நிறுமம் ரூ. 100 மதிப்புடைய 50,000 நேர்மைப் பங்குகளை 10% தள்ளுபடியில் (தள்ளுபடி ஒதுக்கீட்டின்போது சரி செய்யப்படும் ) வெளியிட்டது . நிகரத்தொகை பின்வருமாறு செலுத்தப்பட வேண்டும் .

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ. 20 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ. 20 |
| முதல் அழைப்பின்போது | ரூ. 25 |
| இரண்டாம் அழைப்பின்போது | ரூ. 25 |

அனைத்துப் பங்குகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. டேவிட் வைத்திருந்த 100 பங்குகள் மீதான இறுதி அழைப்புத் தொகை பெறப்படாமையால் பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன . இதில் 40 பங்குகள் பங்கு ஒன்று ரூ . 70 வீதம் சிவா என்பவருக்கு முழுவதும் செலுத்தப்பட்டதாக மறுவெளியீடு செய்யப்பட்டன . குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

********************************************

QB 365 QUESTION BANK 365 https://www.qb365.in